1973 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) 12.

(இ) இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: இந்த மருத்துவமனை சுற்றுவட்டாரத்தில் 20 மைலுக்கு சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. நல்ல முறையில் டாக்டர்கள் பணி புரிந்து வருகிறார்கள் இனியாவது இந்த ருத்துவமனையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து படுக்கை வசதியை அதிகரிக்க உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: படுக்கை வசதி என்பது தனியாகப் படுக்கைகளைமட்டும் போட்டுவிடுவது என்பது அல்ல. இட வசதி தேவை. இரண்டாவதாக இட வசதிக்குப் பின்னர் படுக்கை வசதி அதிகரிப்பதற்கேற்ப, அலுவலர்கள் எண்ணிக்கை அதிகப்படும். ஆகவே, இது படிப்படியாக தேவைக்கேற்ப செய்யப்படும். அண்மையில் அங்கே ஒரு எக்ஸ்ரே பிளாக் கட்டப் பட்டு, அந்தக் கருவி பொருத்தப்பட்டிருக்கிறது. எனவே இப்படி ஆண்டுதோறும் பல்வேறு வகையில் வளர்ச்சி ஏற்பட வழி செய்யப்படும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: அமைச்சர் அவர்கள் எக்ஸ்ரே அலுவலகம் கட்டப்பட்டதாகச் சொன்னார்கள். ஆனால் அங்கே அதற்கு எந்தவிதமான வேலையும் துவக்கப்படவில்லை. இனியாவது உடனடியாகத் துவக்கப்படுவதற்கு ஆவன செய்து அமைச்சர் உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: உத்தரவு 16—3—73-ல் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கே ஒரு வேலை கண்டிராக்டர் இன்னும் சரியானபடி கிடைக்காமல் இருக்கலாம். எம்.எல்.ஏ. அவர்கள் அந்த வகையில் உதவி செய்யலாம்.

Microphone, etc., for Primary Health Centres

* 56 *Q.*—THIRU N. DENNIS
THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether Microphone, amplifier and record players have been purchased by the Health Services and Family Planning Department for the Primary Health Centres during 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லே.

(இ) இக்கேள்வி எழவில்லே.

Thiru N. DENNIS : May I know whether the Government would consider that such an arrangement would be an effective method of propaganda for family planning?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலேவர் அவர்களே, மைக்ரோபோன், ஆம்ப்ளிஃபையர் முதலானவைகளே வைப்பதன் மூலமாகவும், பாடல் தட்டுகளே அதிகமாக பயன்படுத்துவதன் மூலமாகவும், பாடல் தட்டுகளே அதிகமாகப் பயன்படுத்துவதன் நடைபெற வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் எல்லா ஆரம்ப சுகாதார நிலேயங்களுக்கும் இவை வாங்கித் தரப்படவில்லே. இது ஒரு வகையான பிரச்சாரம். வானெலியில் ஒரு வகையான பிரச்சாரம் தொடர்ந்து நடைபெறுகிறது. இன்னும் அதுபற்றி அவ்வப்பொழுது பொது மக்கள் தலேவர்களுடைய பேச்சு பிரச்சாரமாக அமைகிறது. மக்களுடைய மனம் மெல்ல மெல்ல மாறத்தக்க வகையில் இருக்கிறது என்று கருதுகிறேன்.

Supply of ice for Hospitals

* 57 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start an Ice Manufacturing Unit in the Public Sector for supply of ice to Hospitals in Madras City; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லே.

(இ) கேள்வி எழாது.

திரு. என். டென்னிஸ் : தலேவர் அவர்களே, இதன் விலே அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மருத்துவமனேகளில் இதன் அவசியத்தை உணர்ந்து இதை உற்பத்தி செய்ய அரசின் சார்பில் ஒரு தொழிற்சாலே அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதனுடைய விலே அதிகரித்தாலும்கூட மருத்துவமனேகளில் இதற்காக ஆகக்கூடிய செலவு மிகச் சாதாரணமான செலவுதான். ஐஸ் உற்பத்தி